தினமணி

Thursday, September 15, 2011 9:42 AM IST

**வாழைப் பயிருக்கு இன்சூரன்ஸ் திட்டம்**

First Published : 15 Sep 2011 12:00:00 AM IST



சிதம்பரம் : வாழைப் பயிருக்கு இன்ஸ்சூரன்ஸ் திட்டம் உள்ளதால் விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு, பரங்கிப்பேட்டை தோட்டக்கலை உதவி இயக்குநர் பா.ராஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: வாழைப் பயிர் அதிக வருமானம் தரும் தோட்டக்கலைப் பயிர்களில் ஒன்றாகும்.

விவசாயிகள் செலவு செய்து சிறந்த முறையில் பயிரிடப்படும் வாழைப் பயிரானது வருமானம் தரும் நேரத்தில் திடீரென ஏற்படும் இயற்கைச் சீற்றங்களான புயல், வெள்ளம் ஆகியவற்றால் மிக எளிதில் பாதிக்கப்பட்டு பயிர் சேதமடைய வாய்ப்புள்ளது.

இதனால் விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுகிறது. விவசாயிகள் தாங்கள் பயிரிட்டுள்ள வாழைப் பயிரை இத்தருணத்தில் காப்பீடு செய்து புயல், வெள்ளத்தால் ஏற்படும் சேதத்துக்கு நஷ்டஈடு பெறலாம்.

வங்கிகளில் கடன் பெற்றுள்ள விவசாயிகள், கடன் பெறாத விவசாயிகள் ஆகிய இருசாராரும் வாழைப் பயிரை காப்பீடு செய்து கொள்ளலாம்.

விவசாயிகள் தாங்கள் பெறும் கடன் தொகையில் 7.40 சதவீதத்தை பிரீமயமாக செலுத்த வேண்டும். இதில் 50 சதவீதம் (3.70) அரசு மானியம் போக மீதி 50 சதவீதம் பிரீமியம் செலுத்தினால் போதும்.

கடன் தொகைக்கும் கூடுதலான தொகைக்கு பிரீமியம் செலுத்த விரும்பினாலும் செலுத்தலாம்.

சிதம்பரம் வட்டத்தில் உள்ள வாழை விவசாயிகள் பரங்கிப்பேட்டை, பு.முட்லூர், புதுச்சத்திரம், பூவாலை, சாத்தப்பாடி, கீழமணக்குடி ஆகிய தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களிலும், பரங்கிப்பேட்டை இந்தியன் வங்கி மற்றும் பு.முட்லூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகிய வங்கிகளிலும் பிரீமியத் தொகையை செலுத்தலாம் என பா.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

**குருத்து அழுகல் நோயிலிருந்து தென்னையைக் காக்க...**

First Published : 15 Sep 2011 12:00:00 AM IST



வேளாண்துறை யோசனை

திருநெல்வேலி: குருத்து அழுகல் நோயிலிருந்து தென்னையைக் காக்கும் முறைகள் குறித்து வேளாண் துறை விளக்கம் அளித்துள்ளது.

தென்னையில் இளம் பருவத்தில் குருத்துப் பகுதியைத் தாக்கி குருத்து அழுகலை ஏற்படுத்தும் இந்நோய் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகிறது. வடிகால் வசதியற்ற நீர் தேங்கும் தன்மையுள்ள நிலங்களிலும், காற்றின் ஈரத் தன்மை அதிகமாக காணப்படும் பருவ மழைக் காலங்களிலும் இந்நோயின் தாக்குதல் பரவலாக காணப்படும்.

இந்நோய் ஃபைட்டோப்தோரா பால்மிவோரா என்ற பூசணத்தால் ஏற்படுகிறது. இது மண்ணில் வாழும் தன்மை கொண்டது. பாதிக்கப்பட்ட மரத்தில் இருந்து நீரின் மூலம் சுற்றி உள்ள ஆரோக்கியமான மரங்களுக்கும் இது பரவி குருத்து அழுகலை ஏற்படுத்தும்.

இந்நோய் தாக்கப்பட்ட கன்றுகளின் குருத்து இலை வறண்டு காணப்படும். நோயின் தாக்குதல் தீவிரமாகும் போது குருத்து முழுவதும் அழுகி அனைத்து இலைகளும் வறண்டு மரம் பட்டுவிடும்.

பாதிக்கப்பட்ட குருத்து இலைகளை இழுத்தால் கையோடு வந்து விடும். அதன் அடிப்பாகம் அழுகி நுர்நாற்றம் வீசும். இந்நோய் முதலில் இலைகளின் வெளிப்புறத்தை தாக்கி, பின்னர் குருத்து இலையை நோக்கி பரவும். அந்த நேரத்தில் தடுப்பு முறைகளை செய்தால் தென்னையை இந்நோயிலிருந்து காப்பாற்றலாம்.

தடுப்பு முறைகள்: வரும்முன் காக்கும் வழிமுறையாக தோப்புகளில் வடிகால் வசதியை மேம்படுத்தி அதிகப்படியான நீர் தேங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட மரங்களை தனிமைப்படுத்தி அதற்கு தனியாக நீர் பாய்ச்ச வேண்டும். பரிந்துரை செய்யப்படும் உரங்களுடன் ஒரு மரத்திற்கு 5 கிலோ வீதம் வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும்.

குருத்து அழுகல் நோயால் பாதிக்கப்பட்டு பட்டுபோன மரங்களை வேர்ப் பகுதியுடன் வயலில் இருந்து அகற்றி எரிக்க வேண்டும். அவ்வாறு தோண்டிய குழிகளில் சருகுகளை வைத்து தீயிட்டு கொளுத்த வேண்டும். இவ்வாறு செய்வதால் மற்ற மரங்களுக்கு இந்நோய் உண்டாகும் பூசணம் பரவுவது தடுக்கப்படும்.

மட்டையின் வெளிப்பகுதியில் அழுகல் ஆரம்பித்தவுடன் அந்த அழுகிய பகுதியை வெட்டி அகற்றி விட்டு, வெட்டப்பட்ட பகுதியில் காப்பர் ஆக்ஸிகுளோரைடு பசையை தடவ வேண்டும்.

மரம் முழுவதும் நன்றாக படும்படி காப்பர் ஆக்ஸிகுளோரைடு 0.2 சதவிகிதத்தை ஒரு லிட்டர் தண்ணீரில் அல்லது குளோரோ தலானில் 0.1 சதவிகிதம் ஒரு லிட்டர் தண்ணீரில் பூசணக் கொல்லியை கலந்து தெளிக்க வேண்டும்.

இவ்வாறு செய்தால் குருத்து அழுகல் நோயிலிருந்து தென்னையை காப்பாற்றலாம் என மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சா. தேவசகாயம் தெரிவித்துள்ளார்.

**மகசூல் அதிகரிக்க சிறந்த வழி திருந்திய நெல் சாகுபடி முறை**

First Published : 15 Sep 2011 12:00:00 AM IST



தருமபுரி : நெல் மகசூல் அதிகரிக்க, திருந்திய நெல் சாகுபடி முறையே சிறந்தது என்று தருமபுரி மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கா.ராஜன் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து, அவர் கூறியது:

தருமபுரி மாவட்டத்தில் சம்பா பருவத்தில் ஆண்டுதோறும் சராசரியாக 45,000 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பருவத்தில் சராசரி நெல் உற்பத்தி 2,650 கிலோ என்ற அடிப்படையில் உள்ளது. இது சராசரி உற்பத்தித் திறனில் 50% மட்டுமே. எனவே, உற்பத்தித் திறனை உயர்த்த திருந்திய நெல் சாகுபடி முறையே சிறந்த வழி.

குறைந்த விதை, இளம் நாற்றுகள் நடவு செய்தல், அதிக இடைவெளியில் சதுர முறையில் நடவு, களைக் கருவி பயன்பாடு, நீர்மறைய நீர்ப் பாய்ச்சுதல் ஆகியவை இம்முறையின் சிறப்பு அம்சங்கள்.

நாற்றங்கால் பராமரிப்பு: சாதாரண முறையில் ஒரு ஏக்கர் நெல் நடவு செய்ய, 20 கிலோ விதை தேவை. திருந்திய நெல் சாகுபடியில் ஏக்கருக்கு 3 கிலோ விதை போதுமானது. விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் புளூரோசென்ஸ், நுண்ணுயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் ஒரு பாக்கெட் மற்றும் பாஸ்போ பாக்டீரியா ஒரு பாக்கெட் கலந்து விதை நேர்த்திசெய்ய வேண்டும்.

முளைப்பு கட்டி, பின் விதைப்பு செய்ய வேண்டும். ஏக்கருக்கு ஒரு சென்ட் நாற்றங்கால் போதுமானது. 5செ.மீ., பரப்பு கொண்ட 8 மேடை பாத்திகள் அமைத்து, விதைகளை தூவி நாற்றாங்கால் மீது வைக்கோல் பரப்பி பூவாளி மூலம் 3 நாள்களுக்கு தண்ணீர் தெளிக்க வேண்டும்.

பின்னர், வைக்கோலை நீக்கிவிட்டு சாதாரண முறையில் பாசனம் செய்ய வேண்டும். இப்படி தயாரிக்கப்பட்ட நாற்றங்காலில் நாற்றுகள் 14 நாள்களிலேயே தயாராகிவிடும்.

நடவு செய்தல்: நன்கு சமப்படுத்தப்பட்ட வயலில் 14 நாள்கள் வயதுடைய இளம் நாற்றுகளை அதிக இடைவெளியில் சதுர முறையில் ஒரு குத்துக்கு ஒரு நாற்று வீதம் நடவு செய்ய வேண்டும். ஒரு சதுர மீட்டரில் 20 குத்துகள் இருக்கும் வகையில் நடவு செய்ய வேண்டும்.

நடவு அடையாளமிடும் கருவி அல்லது அடையாளமிடப்பட்ட கயிறு பயன்படுத்தலாம்.

களைக்கருவி பயன்பாடு: நடவு செய்த 10-ம் நாள் முதல் 10 நாள்கள் இடைவெளியில் கோனோ களைக் கருவி கொண்டு குறுக்கும், நெடுக்குமாக வரிசைகளுக்கு இடையே ஓட்டி களை நீக்கம் செய்ய வேண்டும். கருவிக்கு அகப்படாத களைகளை கையால் நீக்க வேண்டும். இதனால் மண்ணில் காற்றோட்ட வசதி ஏற்படுகிறது. பழைய வேர்கள் அறுபட்டு, புதிய வேர்கள் தோன்றுகின்றன. அதிக தூர்கள் வெடிப்பதோடு பயிர் நல்ல வளர்ச்சி பெறுகிறது.

உர நிர்வாகம்: இலை வண்ண அட்டையைப் பயன்படுத்தி, தழைச்சத்து நிர்வாகம் செய்ய வேண்டும். நடவு செய்த 15-வது நாள் முதல், நன்கு விரிந்த இளம் சோகையுடன் 10 இடங்களில் இலை வண்ண அட்டையில் உள்ள நிறங்களுடன் ஒப்பிட்டு சராசரி நிற எண்ணைக் குறிப்பிட்டு

அதற்கேற்ப தழைச்சத்து இட வேண்டும். 10 நாள்களுக்கு ஒரு முறை இவ்வாறு சோதிக்க வேண்டும்.

நீர் நிர்வாகம்: நீர் மறைய நீர்ப் பாய்ச்சுதல் என்ற அடிப்படையில் மஞ்சுக்கட்டும் பருவம் வரை நீர்ப் பாய்ச்ச வேண்டும். பின்னர், ஒரு அங்குல நீர் இருக்கும் வகையில் பாசனம் செய்ய வேண்டும். நெற்பயிருக்கு பரிந்துரைக்கப்படும் இதர தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் ஆகியவற்றை பின்பற்றினால் சாதாரண நெல் நடவு முறையில் பெறும் மகசூலைவிட 25% கூடுதல் மகசூல் பெறலாம்.

ஏக்கருக்கு 750 கிலோ கூடுதலாக கிடைக்கும். எனவே, விவசாயிகள் அனைவரும் திருந்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்ற வேண்டும் என்றார் அவர்.

**மானிய விலையில் பழ மரக் கன்று, விதைகள்**

First Published : 14 Sep 2011 10:07:45 AM IST

Last Updated : 15 Sep 2011 09:05:12 AM IST

திருவாடானை, செப். 13: திருவாடானை தாலுகா ஆர்.எஸ்.மங்கலம் பகுதி தோட்டக்கலை விவசாயிகளுக்கு பழ மரக்கன்றுகள், விதைகள் மானிய விலையில் வழங்கப்படுவதாக தோட்டக்கலை உதவி இயக்குநர் சேகர் தெரிவித்தார்.

மா, பலா, சப்போட்டா, முந்திரி, நெல்லி, கொய்யா போன்ற பழ மரக் கன்றுகள் 50 சதவீத மானிய விலையிலும், கத்தரி, வெண்டை, புடலை, பூசணி, முருங்கை, மிளகாய் போன்ற காய்கறி விதைகள் 50 சதவீத மானிய விலையிலும் கிடைக்கும்.

மேலும் விவரங்களுக்கு தோட்டக்கலை உதவி இயக்குநர் சேகரன் அல்லது தோட்டக்கலை உதவி அலுவலர் இராஜமாணிக்கம், விரிவாக்க அலுவலர் யோகநாதன் ஆகியோரை அணுகுமாறு தோட்டக்கலை உதவி இயக்குநர் தெரிவித்தார்.

**மலைவாழ் மக்களுக்கு பட்டுப் புழு வளர்ப்புப் பயிற்சி**

First Published : 15 Sep 2011 08:16:47 AM IST

திருவண்ணாமலை, செப். 14: நபார்டு வங்கி மூலம் மலைவாழ் மக்களுக்கு பட்டுப் புழு வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்படும் என அவ்வங்கியின் தமிழ்நாடு மண்டல தலைமைப் பொது மேலாளர் லலிதா வெங்கடேசன் கூறியுள்ளார்.

நபார்டு வங்கி, பட்டு வளர்ச்சித் துறை சார்பில் ஜவ்வாதுமலை ஒன்றிய மலைக்கிராமங்களில் மலைவாழ் மேம்பாட்டு நிதி முன்னோடித் திட்டம், மானிய உதவியுடன் 3 ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படுகிறது.

திட்ட தொடக்க விழாவுக்கு பட்டு வளர்ச்சித் துறை துணை இயக்குநர் வெ.பரமசிவம் தலைமை தாங்கினார். நபார்டு தலைமை பொதுமேலாளர் லலிதா திட்டத்தைத் தொடங்கிப் பேசியது:

இத்திட்டத்துக்காக நபார்டு வங்கி ரூ.43.9 லட்சமும், தமிழக அரசின் பட்டு வளர்ச்சித் துறை ரூ.27.5 லட்சமும், தொழில்நுட்ப உதவியும் அளிக்கிறது.

பூமி அறக்கட்டளை இத்திட்டத்தை 3 ஆண்டுகளுக்கு செயல்படுத்துகிறது. ஜவ்வாதுமலை கிராமங்களைச் சேர்ந்த 110 குடும்பங்களுக்கு பட்டுப்புழு வளர்ப்பு மனை கட்டித் தர நிதி, தொழில்நுட்ப உதவி வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் பட்டு வளர்ப்பு பெரிய அளவில் இருக்கும். நவீன தொழில்நுட்பங்களை கடைபிடித்து அதிகமான பட்டுக்கூடுகளை அறுவடை செய்து தங்களின் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

சேலம் பட்டு வாரிய விஞ்ஞானி ராஜ்குமார், பட்டு வளர்ச்சி உதவி இயக்குநர் பழனிச்சாமி, நபார்டு வங்கி உதவிப் பொதுமேலாளர் சுதர்சன் ஆகியோர் பட்டுப் புழு வளர்ப்பு குறித்து விளக்கினர் முன்னோடி வங்கி மேலாளர் என்.செல்வம், பூமி அறக்கட்டளை இயக்குநர் டி.ஞானசூரியபகவான், வனச்சரகர் அன்பழகன், ஒன்றிய கவுன்சிலர் கோவிந்தராஜ், மாவட்டக் கவுன்சிலர் வெள்ளையன், பட்டு வளர்ச்சி ஆய்வாளர் சையத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 15 Sep 2011 02:14:14 AM IST

சென்னை, செப்.14: தமிழகத்தில் வியாழக்கிழமை மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுவையில் புதன்கிழமை மாலை மற்றும் இரவு நேரங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

சென்னையில் வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை மற்றும் இரவு நேரங்களில் இடியுடன் கூடிய கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

சென்னையில் பகல் நேர வெப்பநிலை 34 டிகிரி செல்சியசாக இருக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தினமலர்
உண்மையின் உரைகல்

**மழையில் நனைந்து முளை விட்ட நெல் மணிகள்அரசு நேரடி கொள்முதல் நிலையத்தில் அவலம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2011,03:01 IST

ஸ்ரீமுஷ்ணம்:ஸ்ரீமுஷ்ணம் அருகே நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் உள்ள நெல் மழையில் நனைந்து முளை விடத் துவங்கியதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.ஸ்ரீமுஷ்ணம் அடுத்த கானூரில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இங்கு கானூர், பவழங்குடி, கூடலையாத்தூர், வட்டத்தூர், கீரமங்கலம் உட்பட 20க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் நெல்லை விற்று வருகின்றனர்.இந்நிலையத்தில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக விவசாயிகள் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெல் மூட்டைகளை திறந்த வெளியில் அடுக்கி வைத்துள்ளனர்.கடந்த மூன்று நாட்களாக இரவு நேரங்களில் பெய்து வரும் தொடர் மழையால் 1,000க்கும் மேற்பட்ட நெல் மூட்டைகள் மழையில் நனைந்து முற்றிலுமாக சேதமடைந்துள்ளன. நெல் மணிகள் அனைத்தும் முளை விட்டு பாழாகியுள்ளது.மழையில் நனைந்த நெல்லை கொள்முதல் நிலையத்தில் ஈரப்பதம் எனக் கூறி ஒதுக்குவதால் தினமும் காய வைப்பதும் மீண்டும் இரவு நேரத்தில் மழையில் நனைவதும், மறுநாள் காய வைப்பதும் என விவசாயிகள் அல்லாடி வருகின்றனர்.

தனியார் வியாபாரிகளிடம் நெல் விற்பனை செய்தால் பணத்தைப் பெற இரண்டு மாதத்திற்கு மேல் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுவதால் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர்.ஆனால் இங்கு கொள்முதல் செய்யவே ஒரு மாதம் ஆவதால் வேறுவழியின்றி தனியாரிடம் குறைந்த விலைக்கு நெல்லை விற்க வேண்டிய அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.
இது குறித்த விவசாயி ஒருவர் கூறுகையில், "ஒரு நாளைக்கு இரண்டு லட்சம் ரூபாய்க்கும் மேலாக நெல் கொள்முதல் செய்துவந்த கொள்முதல் நிலையங்களில் தற்போது 50 ஆயிரம் ரூபாய்க்கு மட்டுமே கொள்முதல் செய்கின்றனர். இதனால் 25 நாட்களுக்கும் மேலாக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது' என்றார்.மாவட்ட நிர்வாகம் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குப் போதுமான அளவில் பணம் பட்டுவாடா செய்து விவசாயிகளின் வேதனையை போக்க வேண்டும்.

## பண்ருட்டியில் முந்திரி விலை வீழ்ச்சி அபாயம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2011,02:56 IST

பண்ருட்டி:முந்திரி இறக்குமதி; அமெரிக்காவுக்கு ஏற்றுமதி குறைவு காரணமாக பண்ருட்டியில் முந்திரி விலை வீழ்ச்சியடையும் நிலை உள்ளது.உள்நாட்டில் உற்பத்தி குறைவு, தென் ஆப்ரிக்கா, ஐவேரிகோஸ்ட் நாடுகளில் உள்நாட்டு கலவரம் காரணமாக அந்நாடுகள் ஏற்றுமதி தடை விதிக்கப்பட்டிருந்ததால் முந்திரி வரத்து குறைந்தது. இதனால் 80 கிலோ கச்சா முந்திரி 5,500லிருந்து 7,000 ரூபாய் வரை விலை உயர்ந்தது. கடந்த ஜூன் மாதம் முதல் இறக்குமதி முந்திரி மற்றும் தமிழகம், கேரளாவில் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்து வந்தது.தற்போது ஐவேரிகோஸ்ட் நாட்டு முந்திரி 80 கிலோ மூட்டை 5,800 ரூபாயாக குறைந்துள்ளது.

இதனால் உள்ளூர் முந்திரி 7,200லிருந்து 6,500 - 6,800 ரூபாயாக குறைந்துள்ளது. மேலும் இந்தியாவில் இருந்து அதிகளவில் ஏற்றுமதியாகும் அமெரிக்கா நாட்டில், பொருளாதார வீழ்ச்சி காரணமாக கணிசமாக ஏற்றுமதி குறைந்தது.அரபு, சிங்கப்பூர், மலேசியா உள்ளிட்ட நாடுகளுக்கு சிறிய அளவில் ஏற்றுமதி நடந்து வருகிறது. அங்கும் வியாட்நாம் உள்ளிட்ட நாடுகள் பயிர்களை சந்தைப்படுத்தி வருவதால் போட்டி அதிகரித்துள்ளது.ஆனால் பதப்படுத்தப்பட்ட முந்திரி பயிர் சராசரியாக ஒரு கிலோவிற்கு 50 ரூபாய் அளவில் விலை உயர்ந்துள்ளது. 240 ரகம் 450 ரூபாயும், 320 ரகம் 430ம், ஜே.எச்.435, பட்ஸ் 390ம், ஆவரேஜ் 360ம், எல்.டபிள்யூபி 380ம், எஸ்.டபிள்யூபி 300 ரூபாய்க்கும் விற்பனையாகிறது.கடந்த ஒரு மாதமாக இந்தியாவில் ரம்ஜான் பண்டிகை, விநாயகர் சதுர்த்தி பண்டிகைகள் முடிந்து சரஸ்வதி பூஜை, தசரா பூஜை, தீபாவளி பண்டிகை வர உள்ளதால் சில்லரை விற்பனையில் விலை குறைவதற்கு வாய்ப்பில்லை என்கின்றனர் வியாபாரிகள்.

வெளிநாடு ஏற்றுமதி குறைவு காரணமாக முந்திரி விலை கடுமையாக வீழ்ச்சியடையும் என ஏற்றுமதியாளர்கள் கருதுகின்றனர்.இதுகுறித்து முந்திரி ஏற்றுமதியாளர் பிரதிபா கேஷ்யூஸ் ராமகிருஷ்ணன் கூறுகையில், "கடந்த ஆண்டு உற்பத்தியான முந்திரி பயிர்கள் விவசாயிகளிடம் போதிய அளவில் இருப்பு உள்ளது. அதுபோல் இறக்குமதி கச்சா முந்திரி வரவும் அதிகமாக உள்ளது.டாலர் மதிப்பு வீழ்ச்சி காரணமாக அமெரிக்காவிற்கு ஏற்றுமதி இல்லை. இதனால் முந்திரி விலை குறையும்' என்றார்.

**மரத்தின் நடுவே வாழை குலை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2011,03:41 IST

திருவெண்ணெய்நல்லூர்:வாழை மரத்தின் நடுவே குலை தள்ளியது.திருவெண்ணெய்நல்லூர் அடுத்த சிறுவானூர் காலனியைச் சேர்ந்த சாமான் மகன் துளசிங்கம்,46. இவருக்கு சொந்தமான தோட்டத்தில் உள்ள ஒரு வாழை மரத்தின் நடுவே கடந்த 12ம் தேதி குலை தள்ளி இருந்தது. வழக்கத்திற்கு மாறாக வாழை மரத்தின் நடுவே குலை தள்ளியதால் கிராம மக்கள் அதனை ஆர்வத்துடன் பார்த்து சென்றனர்.

**மக்காச்சோளம் கொள்முதல் விலை சரிவு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2011,21:54 IST

பல்லடம் : ஆந்திரா, கர்நாடகா மாநிலத்தில் இருந்து பல்லடம், உடுமலை பகுதிகளுக்கு புது மக்காச்சோளம் வரத்து அதிகரிக்கத் துவங்கியுள்ளது. இதன் காரணமாக, உள்ளூர் மக்காச்சோளம் மூட்டைக்கு ரூ.100 சரிந்துள்ளது. கொள்முதல் விலை தொடர்ந்து சரியலாம் என்பதால், பல்லடம், உடுமலை விவசாயிகள் மக்காச்சோளம் இருப்பு வைக்க அச்சம் அடைந்துள்ளனர். பல்லடம், உடுமலை, பொங்கலூர் அடங்கிய பல்லடம் பகுதியில் 10 ஆயிரம் கறிக்கோழி உற்பத்தி பண்ணைகள் உள்ளன. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் கறிக்கோழிகள், தமிழகம் மற்றும் கேரளாவுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. கறிக்கோழிகளுக்கு உணவாக புரோட்டின் சத்து நிறைந்த கோழித்தீவனங்கள் வழங்கப்படுகின்றன. கறிக்கோழி தீவனங்கள் தயாரிக்க முக்கிய மூலப்பொருளாக மக்காச்சோளம் உள்ளது. தீவனம் தயாரிப்பில், மக்காச்சோளத்தின் பங்கு 50 முதல் 60 சதவீதம். பல்லடம், பொங்கலூர், உடுமலை பகுதியில் உள்ள கறிக்கோழிகளுக்கு தீவனம் தயாரிக்க, பல்லடம் மற்றும் உடுமலை, சுற்றியுள்ள பகுதிகளில் விளையும் மக்காச்சோளமும், கர்நாடகா மற்றும் ஆந்திராவில் இருந்து வரும் மக்காச்சோளமும் கொள்முதல் செய்யப்படுகின்றன. கடந்த 10 நாட்களுக்கு முன், 100 கிலோ கொண்ட ஒரு மூட்டை மக்காச்சோளம், ரூ.1,300க்கு கொள்முதல் செய்யப்பட்டது. கடந்த சில நாட்களாக கர்நாடகா மற்றும் ஆந்திராவில் இருந்து பல்லடம், உடுமலை, பொங்கலூர் பகுதிக்கு புது மக்காச்சோளம் வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக, மூட்டைக்கு ரூ.100 சரிந்து 1,200 ஆக கொள்முதல் விலை உள்ளது. விலை சரிவு உள்ளூர் விவசாயிகளை கவலை அடையச்செய்துள்ளது. தற்போதுள்ள விலையை விட, மேலும் ரூ.50 முதல் 100 வரை சரியலாம் என தகவல் வெளியாகியுள்ளதால் அச்சம் அடைந்துள்ளனர். இருப்பு வைக்காமல், மொத்த வியாபாரிகள்,

கறிக்கோழி பண்ணையாளர்கள் மற்றும் தீவன தயாரிப்பாளர்களுக்கு மக்காச்சோளத்தை விற்று வருகின்றனர்.

**ரூ.66 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2011,21:54 IST

அவிநாசி : சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 6,000 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை விட 3,880 மூட்டை அதிகம். வரத்து அதிகரித்ததோடு, அனைத்து ரகங்களும் குவிண்டாலுக்கு ரூ.300 முதல் 550 வரை அதிக விலைக்கு ஏலம் போனது. விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நேற்றைய ஏலத்தில் நிலக்கடலை (காய்ந்தது) விலை விவரம் (குவிண்டாலுக்கு) வருமாறு: முதல் ரகம் ரூ.3,710 முதல் 4,000 வரை, இரண்டாம் ரகம் ரூ.3,560 முதல் 3,700 வரை, மூன்றாம் ரகம் ரூ.3,210 முதல் 3,500 வரை, பச்சை ரகம் ரூ.1,710 முதல் 1,990 வரை விலைக்கு போனது. சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) மகேந்திரசிங் கூறுகையில், ""தற்போது சீசன் நன்றாக உள்ளதால், இந்த வாரம் வரத்து அபரிதமாக அதிகரித்தது. கடந்த வாரத்தை விட, வரத்து அதிகரித்தது; அனைத்து ரகங்களும் நல்ல விலைக்கு ஏலம் போயின. ரூ.66 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது. அடுத்த வாரங்களிலும் வரத்து அதிகரித்து, விலையும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது," என்றார்.

**சூரியகாந்தி அறுவடை தொடங்கியது உடனே விற்க விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2011,00:49 IST

வேலாயுதம்பாளையம்: கரூரை அடுத்த மண்மங்கலம், தளவாப்பாளையம், மூர்த்திபாளையம், ஓலப்பாளையம், சேமங்கி, மறவாபாளையம், நொய்யல், வாங்கல், என். புதுார் ஆகிய பகுதிகளில் சூர்ய காந்தி பயிர் கடந்த ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டது. அறுவடை செய்யப்படும் சூரியகாந்தி, ஈரோடு மாவ ட்டம் வெள்ளக்கோவில் ஒழுங்கு முறை விற்பனை கூடம் மற்றும் திருச்சி, சேலம், திண்டுக்கல் பகுதியில் உள்ள வெளி மார்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. தற்போது சூரியகாந்திக்கு கூடுதல் விலை கிடைக்க வாய்ப்பு இல் லை. எனவே சூரியகாந்தியை உடனடியாக விற்பனை செய்யுமாறு, தமிழ்நாடு வேலா ண்மை பல்கலைகழக இயக்குனர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார். அறிக்கையில் உள்ளதாவது: தமிழ் நாட்டில் சூர்ய காந்தி பயிரிடும் மொத்த ப ரப்பளவு மற்றும் உற்பத்தி முறை 0.29 இலட்சம் எக்டர் ஆகும். உற்பத்தி திறன் 1,334 கிலோ எக்டர் ஆகும். தமிழகத்தில் கரூர், ஈரோ டு, திண்டுக்கல், திருச்சி, தூத்துக்குடி , திருவண்ணாமலை

ஆகிய பகுதிகளில் தற்போது அறுவடை தொட ங்கியுள்ளது. எனவே விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவா க தமிழ்நாடு வேள ாண்மை பல்கலை கழகத்தில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந் தை தகவல் மையத்தின் மூலம் வெள்ள கோவில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் கடந்த 11 ஆ ண்டில் நிலவிய விலைகள் ஆய்வு செய்யப்பட்டது. தற்போது நிலையில் சூர்யகாந்தியின் விலை வரு ம் அக்டோபர் மாதம் வரை ஒரு கிலோவிற்கு 31 முதல் 34 ரூபாய் வரை கிடைக்க வாய்ப்புண்டு. ஆனால் விலை ஏ ற்றத்திற்கு மிகவும் குறைந்த வாய்பே உள்ளதா ல் சூர்யகாந்தி பயிரிட்ட விவசாயிகள் அறுவடை செய்யும் சூர்யகாந்தியை உடனடியாக விற்று விடலாம்.

**வேளாண்மை கருத்தரங்கம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 15,2011,00:26 IST

புதுக்கோட்டை: புதுக்கோட்டை அடுத்த முத்துக்காடு கிராமத்தில் விவசாயிகளுக்கான சுற்றுச்சூழல் சமூக பாதுகாப்பு மற்றும் நீடித்த நிலைத்த வேளாண்மை குறித்த கருத்தரங்கம் நடந்தது. இயற்கை விவசாயி தங்கசாமி தலைமை வகித்தார். கட்சி சார்பற்ற விவசாயிகள் மேம்பாட்டு சங்கச் செயலாளர் அப்பாவு பாலாண்டார் வரவேற்றார். ஆதப்பன், கேசவன், ராஜகோபால், தங்கசாமி, வேலன் உட்பட தொண்டு நிறுவன பிரதிநிதிகள், விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர். இயற்கை விவசாயத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பாரம்பரிய நெல் விதைகள், காய்கறி விதைகள், மண்புழு உரம், பஞ்ச காவியம் உள்ளிட்டவை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. சுற்றுச்சூழல் துறை பொறியாளர் ஜெகன் நன்றி கூறினார்.

**நெல் சாகுபடி முகாம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 14,2011,23:19 IST

நரிக்குடி: நெல்பயிரில் ஹெக்டருக்கு ஏழு டன் மகசூல் பெற, திருந்திய நெல் சாகுபடி விழிப்புணர்வு முகாம், நரிக்குடி திம்மாபுரத்தில் நடந்தது. மாவட்ட வேளாண் உதவி இயக்குனர் முருகதாஸ் தலைமை வகித்தார். துணை இயக்குனர்கள் கனகராஜன் , ஜெயபாண்டியன் முன்னிலை வகித்தனர். வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சக்கரவர்த்தி வரவேற்றார். வேளாண்மை அலுவலர் சோமசுந்தரம் நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ஊர்க்காவலன், கண்ணன் செய்திருந்தனர்.